சிவமயம்

gistered as 'a News paper in Ceylon
P. M. G. NO. H. A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷ (1889) ஆவணிமாதம் 28-ந் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்—வியஒ கார்த்திகைமீ ககஉ (1946 நவம்பர் 26 செவ்வாய்க்கிழமை) [இல கூரு


## ஏட்டிக்குப் போட்டி!

### உலக அரங்கத்தில் விகட நாடகம்

இன்று உலகில் நடப்பது என்ன? இப்போது முடிந்த யுத்தத்திற்குப் பின்பாவது உலகிலே சமாதானம், அமைதி என்பன நிலவுமா? யுத்தம் முடிந்து இப்போது 18 மாதங்களாகின்றன: ஆனால் உலகில் இன்று வல்லரசுகள் எனகிற்கும் ருஷியா, இங்கிலாந்து, அமெரிக்கா என்னும் மூன்று வல்லரசுகளும், யுத்த காலத்தில் எவ்விதமாகச் சைனியங்களுக்குச் செலவு செய்தனவோ, அதே மோலத்தான் இன்றும், 18 மாத காலத்தின் பின்னும் செலவைச் செய்கின்றன. இதன் காரணம் என்ன? உலகில் இன்று பீரங்கிச் சத்தமும், நீர்மூழ்கிகளின் அலறலும் இல்லாவிட்டாலும்வல்லரசுகள் ஒன்றுக்கொன்று யுத்த சந்நத்தமாக விருக்கின்றன.

இன்று உலக வல்லரசுகள் இரு கட்சியாக நிற்கின்றன. ஒன்று சோவியத் ருஷியாவும் அதனை ஆதரிக்கும் நாடுகளும்; சோவியத் ருஷியா கிழக்கைரோப்பாவிலே செக்கோஸ்லேவகியா, பின்லாந்து, ஹங்கேரி முதலாம் நாடுகளையும் பால்க்கன் பிரதேசங்களையும் தன் பக்கத்திற் சேர்த்து வைத்துக்கொண்டு, அந்த நாடுகளிலே அமெரிக்காவோ இங்கிலாந்தோ தலைகாட்டாதபடி கருமம் ஆற்றி வருகிறது. அங்கே, அமெரிக்கரும், ஆங்கிலரும் தம் வர்த்தகத்தை விருத்திசெய்ய முடியாதவர்களாயிருக்கின்றனர். இது ஆங்கில அமெரிக்க கட்சிக்குச் சொல்லொணு ஆத்திரத்தைக் கொடுத்திருக்கிறது. அவர்களும் தங்கள் செல்வாக்கிலும், ஆக்கிரமிப்பிலும் அகப்பட்ட நாடுகளில் சோவியத் செல்வாக்குப் புகாமல் இருக்கப் பகிரதப் பிரயத்தனங்கள் செய்துவருகிறார்கள்.

வியாபார விஷயங்களில் மாத்திரமன்றி, கேந்திர ஸ்தானங்களை வைத்திருப்பதிலும் இந்த மூன்று வல்லரசுகளுக்கிடையே பரஸ்பரம் சந்தேகமும் பிணக்கும் தோன்றி யிருக்கின்றன. இவற்றுக் கெல்லாம் காரணம் யுத்தபீதிதான். நாம் கண்மூடிக்கொண் டிருந்தால் மற்றக் கட்சியின் கையோங்கி எம்மை அடித்துவிடும் என்று இந்த இருகட்சிகளும் சதா அச்சத்துடன் கரும மாற்றுகின்றன; கோடிக்கணக்கான பணத்தை அநியாயமான யுத்த முஸ்தீபு விஷயத்தில் விரயஞ் செய்கின்றன. இந்தப் பரஸ்பர பயமும் பிணக்கும் இல்லாவிட்டால், இந்தக் கோடிக்கணக்கான பணம் உருப்படியான பொதுமக்களின் க்ஷேமலாபத்திற்கான கைங்கரியங்களிற் செலவாகுமே. உலகில் யுத்தபயம் என்பதே இருக்கக் கூடாது. அதற்காக, எல்லா வல்லரசுகளும் தங்கள் தங்கள் ஆயுதங்களையும் சைநியங்களையும் குறைக்க வேண்டும் என்றும், அப்படிச் செய்வதாயின் தான் அதனை வரவேற்பதாயும் ருஷியா, அந்நியநாட்டு மந்திரிகள் கூட்டத்தில் யோசனை கூறியது.

ஆனால் இந்த யோசனையை ஆங்கில, அமெரிக்கக் கட்சி ஏற்கத் தயாராக விருக்கவில்லை. அதன் பயனாகக் குறித்த மூன்று வல்லரசுகளும் போட்டியிட்டு ஆயுத உற்பத்தியில் ஈடுபடுகின்றன. அமெரிக்கா தனது அணுக்குண்டைக் காட்டி ருஷியாவைப் பயமுறுத்துகிறது. ருஷியாவோ, அணுக்குண்டிலும் பார்க்கக் கொடிய பரமாணுக் குண்டுகளை, மாரியெனப் பொழியத் தயாராக விருக்கிறது. இந்த அளவிலே ஐக்கிய தேச ஸ்தாபனங்களின் மகாநாடு, உலகிலே சமாதானம் நிலவ ஸ்தாபிக்கப்பட் டிருக்கிறது.

முதலாவது மகாயுத்தம் முடிந்தபின், உலக அரசியல்வாதிகள் சர்வதேசசங்கம் என்ற ஒரு ஸ்தாபனத்தை நிறுவினார்கள். இன்று ஐக்கிய தேச ஸ்தாபனத்தில் என்ன விகட நாடகக் காட்சிகள் காட்டப்படுகின்றனவோ, அதே காட்சிகள் சர்வதேசசங்கத்திலும் நடித்துக் காட்டப்பட்டன. இதனைக்கண்ட எங்கள் பாரதநாட்டு வீரன் சுபாஷ் சந்திரபோஸ், சர்வதேச சங்கத்தைக் கொள்ளைக்காரர் கூட்டம் என்றார். அந்தச் சங்கம் அடைந்த நிலையை ஐக்கியதேச ஸ்தாபனமும் அடையாதிருக்கவேண்டுமானால், உடன் ஆயுதப் பரிகாரணம் செய்யவேண்டும். வர்த்தகத் தடைகளை நீக்கவேண்டும். அகில உலகமும் ஒரே ஸ்தாபனமாக விளங்கிச் சமரசபாவனை விளங்க வேண்டும்

### ஸ்ரீ ஜாத் ஆனே

இலங்கையில் இந்திய அரசாங்கப் பிரதிநிதியாயுள்ள ஸ்ரீ ஜாத் எம் எஸ் ஆனே இப்போது புதுடெல்கியில் இந்திய அரசாங்க அங்கத்தவர்களுடன் சம்பாஷணைகள் நிகழ்த்தி வருகிறார். அவர் பண்டித நேருவைச் சந்தித்து, மீரத்தில் நடக்கும் காங்கிரஸ் மகாநாட்டுக்கு விஜயஞ் செய்தபின் அடுத்தமாதம் முதல் வாரத்தில் இலங்கைக்கு மீளுவார்,

### அரசாங்கசபை

அரசாங்கசபை இன்று செவ்வாய்க்கிழமை கூடுகின்றது. அக்கூட்டத்தில் இந்த வருடத்து அரசாங்க விஷயங்கள்பற்றி விவாதிக்கப்படும். இதுவரையும் நடைபெற்ற கூட்டங்களைவிட இக்கூட்டம் மிகவும் சுருக்கமானதாகவே இருக்கும். அரசாங்கசபையின் அடுத்தவார நடவடிக்கைகளின் பின்னர் நத்தார் விடுமுறைக்காக ஜனவரி 21 உ வரையும் மேற்கொண்டு கூட்டம் நடைபெறுவது தவணையிடப்படும்.

### இந்தனேஷியாவுக்குப் பாராட்டு

இந்தோனேஷிய மக்கள் தங்கள் சுதந்திரத்துக்காக வீரப்போர் புரிந்து வெற்றியீட்டியிருப்பதைப் பாராட்டி அகில இந்தியக் காங்கிரஸ் காரியச்சபை ஓர் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. மேலும் இத்தீர்மானத்தில் ஆசிய நாடுகளின் முன்னேற்றத்திற்காக இந்திய மக்கள் எப்போதும் ஒத்துழைக்கத் தயாராயிருக்கின்றனர் என்றும் குறிப்பிடப் பெற்றிருக்கிறது.

## தோற்கவில்லை!

### தென்னமெரிக்காவில் ஜப்பானியப் பிரசாரம்

தென் அமெரிக்க நாடுகளில் லட்சக்கணக்கான ஜப்பானியர் குடியேறியுள்ளார்கள். இவர்களிற் பலர்தோட்டத் தொழிலாளராகவும், ஏனைய தொழிலாளராகவும் இருக்கின்றனர். இவர்களில், ஜப்பான் இன்னும் யுத்தத்தில் தோற்கவில்லை என்று பிரசாரம் புரியும் சில பயங்கரவாதிகள் இருக்கிறார்கள், தங்கள் பிரசாரங்களைக் கேட்க, அல்லது கேட்டுஉதவி செய்ய மறுக்கும் ஜப்பானியரை இவர்கள் அக்கிரமாகக் கொலை செய்துவிடுவர்.

பிரேஸில்நாட்டில் இந்தப் பயங்கர இயக்கத்தினர் சினிமாப் படங்கள் மூலமாக ஜப்பான் தோற்கவில்லை என்று பிரசாரம் செய்கிறார்கள். ஹிரோகிற்றோ சக்கரவர்த்தி இன்னும் சிம்மாசனத்தில் இருக்கிறார்; உலகம் முழுவதும் பிரமிக்கக் கூடிய கருமங்களை அவர் ஆற்றப்போகிறார் என்று இன்னோரன்ன பிரசாரங்களை இந்த இயக்கத்தினர் செய்து வருகின்றனர். இவர்களிற் பலரை தென் அமெரிக்காவின் பல்வேறு அரசாங்கங்கள் சிறைப்பற்றி யிருக்கின்றனவேனும், இன்னும்பலர் தலைமறைவாக விருக்கின்றனர்.

## 35384 ரூபா!

### சந்தை விற்பனவில் நகரசங்க வருமானம்

யாழ்ப்பாணம் நகர எல்லைக்குள் இருக்கும் சந்தைகள், பஸ்காலை என்பவற்றைக் குத்தகைக்கு விற்றதால் யாழ்ப்பாணம் நகரசபைக்கு 18489 ரூபா 25 சதம் கிடைத்திருக்கிறது. 1947-ம் ஆண்டுக்குப் பின்வரும்சந்தைகள் கீழே காட்டிய விபரப்படிக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் பெரியகடைச் சந்தை (கடைகள் புறநீங்கலாக | 16895 00 |
| இது ஸ்ரீ T. M. சிதம்பரதாசுத்தாம் என்பவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. | |
| யாழ்ப்பாணம் பெரிய கடை பஸ்காலை | 7357 00 |
| யாழ்ப்பாணம் பெரிய கடை மீன்சந்தை | 4021 00 |
| சின்னக்கடைச் சந்தை | 2566 00 |
| செங்குந்தர் சந்தை | 3620 00 |
| சிவியாதெருச்சந்தை | 200 75 |
| தட்டாதெருச் சந்தை | 51 00 |
| முத்திரைச்சந்தை | 210 00 |
| கொழும்புத்துறைச் சந்தை | 36 50 |
| நாவாந்துறைச்சந்தை | 427 00 |
| ஆக | 35384 25 |

## நிஸாம் மன்னர் துயர்

### வகுப்புக் கலவரங்களுக்காக வருத்தம்

பாரதநாட்டில் அமைதியைக் கெடுத்து அந்நிய நாடுகளில் ஓரளவுக்கு இந்தியாவுக்கு மதிப்புக் குறைவைக்கொடுத்த வகுப்புக் கலவரங்கள ஒருவாறு ஓய்ந்துவிட்டன. இவை இனித் தலைகாட்டாதிருக்குமாக. கேவலம் மதத்தின் பெயரால் ஒருவர் மண்டையை இன்னெருவர் உடைப்பதும், பெண்களைக் கற்பழிப்பதும், சிசுக்களைக் கொல்வதும், வீடு வாசல்களை எரிப்பதும் இந்த 20 ம் நூற்ருண்டில் நாகரிகம் படைத்த மக்கள் செய்கையாகாது. உலகத்திலே இன்று நிலவும் எந்த மதமாவதுசரி பலாத்காரத்தை ஆதரிக்கவில்லை. இந்த உண்மையை இந்தியாவில் வதியும் சகல மதஸ்தர்களும் உணரவேண்டும். கேவலம் அரசியல் வானத்தில் ஓர் உச்சநிலையை எய்துவதற்காக, ஜின்னு சாய்பும் அவருடைய கையாட்களும் இக் கலவரங்களைமறைமுகமாகத் தூண்டிவிட்டுத் தம் மாடமாளிகைகளிற் பதுங்கிக்கொள்ள, அவர்களின் ஆவேச மொழிகளைக் கேட்டுக் கிளர்ச்சிகொண்ட பாமர ஜனங்களே இன்று இடைஞ்சற்படுகின்றனர். தலைவர்களாயுள்ளார், தம் கடமையை உணராது விட்டதன் கைமேற் பலன் இது.

இவ்விஷயமாக ஹைதராபாத் சமஸ்தானத்து நிசாம் மன்னர் முஸ்லிம் மக்களுக்குத் தக்க வழிகாட்டியிருப்பதை எவரும் பாராட்டவேண்டும். ஹைதரபாத் மன்னர் ஓர் தனிச்சிறப்புப் பொருந்தியவர். இவர் முஸ்லிம் மக்களுக்குள் பெரிய மதிப்பு உடையவர். அவர் ஜின்னுவைப் போன்ற பொறுப்பற்ற மதப்பித்தர் அல்லர். அதுவுமன்றி ஓர் பெரிய ஹிந்து ராஜ்யமான ஹைதராபாத்தின் மன்னர். அப்படிப்பட்டவர் இன்று இந்தியாவிலே நிகழும் வகுப்புக் கலவரங்களைக்கண்டு அவற்றைக் கண்டித்து ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். அவர் அந்த அறிக்கையிற் கூறுவதாவது:

அரசியல் விஷயத்திலாயினுமாக, சமய விஷயத்திலாயினுமாக எமக்கிடையே அபிப்பிராயபேதம் இருப்பதற்காக, இந்த நாட்டில் வதியும் மக்கள் பலாத்காரத்தில் ஈடுபடுவது மிகத் துக்ககரமான விஷயம். இந்தக் கலவரங்களில் ஈடுபட்டுள்ளவர்கள் யார்? இந்தப் பெரிய நாட்டின் சொந்த மக்களேயவர்கள். எங்கள் புண்ணிய பூமியின் எதிர்காலம் மகத்தானதா யிருக்கப்போகிறது. இந்த நாட்டிலே ஓர் சமூகம் இன்னெரு சமூகத்தைத் தாக்கித் தான் நல்லாய் வாழமுடியாது. பரஸ்பரம் பிணக்குறுவதால், பாரதநாட்டுக்கே ஈற்றில் ஆபத்தாக முடியும் என்பது நிச்சயம். நிராபராதிகளான பெண்களையும் சிசுக்களையும் கொல்லுவோரை ஆண்டவன் தண்டிக்காமல் விடார், இந்தச் சமயத்திலே பாரதநாட்டின்

தொடர்ச்சி 6ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.



# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஹு
கார்த்திகை ககஉ செவ்வாய்க்கிழமை


## இலங்கை இந்திய ஒற்றுமை உண்டாகாதா?

என்றைக்கு இலங்கையிலுள்ள சிங்களத் தலைவரென்றிருப்போர் இந்தியாவைப் புறக்கணிக்க எண்ணங் கொண்டார்களோ, இலங்கையில்வந்திருந்து தொழில் பார்த்த இந்தியர்களை இந்நாட்டை விட்டு அகற்றத் தலைப்பட்டார்களோ, அன்று தொடக்கமே இந்த இலங்கையிலே உடைப்பஞ்சம் உணவுப் பொருட்பஞ்சம்முதலிய பஞ்சங்களெல்லாம் தலைகாட்டத் தொடங்கினவெனலாம். இந்தப் பஞ்சங்களானவை யுத்தகாலத்திலே அதிகப்பட்டு யுத்தம்முடிந்துள்ள காலமாகிய இக்காலத்தில் இலங்கைமக்களைப் பெரிதும் உபாதிக்கத் தலைப்படலாயின. இந்தியாவின் தொடர்பும் இந்திய மக்களின் அபிமானமும் இலங்கையருக்கு எக்காலத்திலும் இன்றியமையாதனவென்பது இலங்கை மக்கள் அநுபவத்திற்கண்டவை, இலங்கைச் சிங்களர் இந்தியாவைப் புறக்கணிப்பதனல், சிங்களரைக் காட்டிலும் அதிக கஷ்டப்படுகிறவர்கள் இலங்கையிலேயுள்ள தமிழர்களாவர்; காரணம் இலங்கையிலேயுள்ள தமிழர்கள் சமயக்கொள்கை கல்வி நாகரீகம் பழக்க வழக்க ஒழுக்கம் நித்திய வாழ்க்கைமுறை தொன்மை யென்னுமிவற்றில் தென்னிந்திய தமிழரைப் பெரும்பான்மையும் ஒத்திருத்தலே யாகும். இவற்றோடு இலங்கைச் சிங்களரும் தமிழரும் அரிசி நெல் புடைவை இன்னும்வாழ்க்கைக் குரிய பொருள்கள் எவைகளோ அவைகள் பொருட்டு இந்தியமக்களையே எதிர்பார்த்த வண்ணம் இருக்கவேண்டிய நிலையினராயினமையே; சிங்களத் தலைவரென்றிருப்போர் இந்தியாவிலிருந்து இங்கு வந்து தொழில் செய்த தமிழரைப் புறக்கணிக்கத் தொடங்கிய நோக்கம் இலங்கையிலுள்ள தமிழர்களின் தொகையையும் உரிமைகளையும் குறைத்து விடுவதற் கென்பது தமிழ்மக்க ளெவரும் அறிந்த இரகசியமாகும்.

இந்தியர் உணவுப் பொருள் புடைவை யென்னு மிவைகளை இலங்கைக்கு ஏற்றுமதி செய்தலிற் பராமுகமாயிருப்பதனல், இங்குள்ள தமிழ் மக்களோடு சிங்களரும் இடைஞ்சற்படுகின்றன ரென்பது நிசமெனினும், மிஸ்ரர் சனநாயக போன்ற சிங்களத் தலைவர்கள் "தனக்கு காசி போனலும் சத்துருவுக்குச் சகுனப் பிழையாயிருந்தாற் சந்தோஷம்" என்ற முறையிற் கருமமாற்றத் தலைப்பட்டுக்கொண்டு இடர்ப்படுகிறார்கள். இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் இந்தியர் நட்பை எந்தக் காலத்தும் வேண்டியே நிற்கின்றனர். இலங்கை இந்தியர் தொடர்பு தொன்மை நிலையடையும் வரையில் இலங்கையின் பஞ்சம் தீர்ந்தபாடில்லை யென்பதை இன்னும் இருந்தறியலாகும். இலங்கை இந்திய தொடர்பைப் பழையபடி யாக்கி வைக்கவேண்டுமென்ற விருப்பம் இங்குள்ள தமிழ் மக்களிடத்தில் மாத்திரமன்றி இந்தியாவிலுள்ள சனத் தலைவரிடத்துமுண்டு; இந்திய மகாநாட்டின் 54ம் ஆண்டு மகா சபையில் தலைமைவகித்த ஆச்சாரிய கிருபாலினி யவர்கள் இலங்கை இந்திய தொடர்பைத் தொன்மைபோல் ஆக்கிவிடலா மென்பதையிட்டுப்பின்வருமாறு கூறியுள்ளார்:-

"இந்தியாவிற்கும் இலங்கைக்கும் பலவிஷயத்திலே ஒற்றுமையுண்டு; இலங்கையிலுள்ள சிங்கள மக்கள் தாம் அநுசரிக்கும் பௌத்தமதத்தை இந்தியாவிலிருந்தே பெற்றுக்கொண்டார்கள்; இருநாடுகளின் இயற்கை அமைப்பு முறையிலும் கல்வி நாகரீகமென்னும் விஷயங்களிலும் பாரம்பரியத்திலும் இலங்கை இந்திய நாட்டுடன் தொடர்புடைமையினுல் இந்தியாவைத் தாயாகவும் இலங்கையை மகளாகவும் கொள்ளலாம். மேலும் இலங்கையின் வடபகுதியாகிய யாழ்ப்பாணத்தை இந்தியாவிலிருந்து எவ்வாற்றுனும் பிரித்தல் இயலாது ஆனுற் சிலகாலமாக இலங்கையிலே போயிருந்து தொழில் செய்யும் இந்தியமக்களுக்கு பிரசை யுரிமை முதலியன இல்லையென்று இலங்கையதிகாரிகள் சொல்லி, தென்னுபிரிக்காவிலுள்ள இந்துக்களை அந்நாட்டரசினர் புறக்கணிப்பதுபோல இலங்கையதிகாரிகளும் புறக்கணிக்கத் தலைப்பட்டுக் கொண்டனர்; இதனுல் இலங்கையதிகாரிகளுக்கும் இலங்கை இந்தியர்களுக்குமிடையே பிணக்கு நேர்தலாயிற்று.... ... ... இலங்கையருக்கும் இந்தியருக்குமிடையேயிருந்த பழைய ஒற்றுமையை இன்னும் ஆக்கலாமென்று நினைக்கிறேன்; இலங்கையானது இந்தியாவிலிருந்து பிரிக்கப்படுமேயானுல், அந்நிய ஆதிக்கத்தினரால் விழுங்கப்படுமென்பது நிசம்."

இதுவே அரசியல் அநுபவமும் கல்வி ஞானம் முதலியவும் படைத்த ஆச்சாரியகிருபாலினியின் அரிய வாக்காகும். இவர் வாக்கை இங்குள்ள சிங்கள அதிகாரிகள் கைக்கொள்வரேல் நன்மையுண்டாம்; கொள்வரோ கொள்ளாரோ யாரறிவார்?

## காரணம் என்ன?

### மின்சார நிலையத்து ஊழல்கள்

சென்ற ஒரு ஆண்டு காலமாக, யாழ்ப்பாணம் மின்சார நிலயத்தில் இடையிடையே நிகழ்ந்துவரும் குழப்பங்களுக்குக் காரணம் என்ன? என்பதனை விசாரித்து அறிவதற்காக, ஸ்தல ஸ்தாபன அதிகாரி ஓர்பகிரங்க விசாரணைச் சபையை நியமித்து, ஏற்றனசெய்யவேண்டுமென்றுயாழ்ப்பாணம்வர்த்தகர் பொதுநலச்சங்கம்சென்றவாரம்கூடியதனதுநிர்வாகசபைக் கூட்டத்தில் ஓர் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

எவர் எப்படிக் கூறியென்? எவர் எப்படி முறையிட்டுமென்? எங்கள் யாழ்ப்பாண நகரசபை தனது நிருவாக ஊழல்களை அகற்றுமோ என்பது சந்தேகம்!

# சிவாஜியின் இரத்தம்!

## ஹிந்துக்கள் நரம்பில் இன்றும் ஓடுகிறது

### ஓலமும் அபயமும்

பண்டிதர் ஜவஹர்லால் நேருவும் அவருடைய சகாக்களும்இடைக்கால அரசாங்கத்துப் பதவிகளைக் கைப்பற்றியநாள் தொடக்கம், இந்திய அரசியலை ஓர் உண்மையான ஜனநாயக ஸ்தாபனமாக்கி வந்தனர். புரட்சிகரமான மாறுதல்களைச் செய்தனர் இந்தியாவுக்கு ஓர் தனிமதிப்பு அயல் நாடுகளில் ஏற்பட்டது. இவையெல்லாம் உந்தியாவின் உப்பைத் தின்று இதுகாறும் அந்த நாட்டிற் கும்மாளம்போட்ட பிரிட்டிஷ் ஐ. ஸி. எஸ். உத்தியோக வர்க்கத்தினர்க்கு வேம்பாகவிருந்தது தங்களுடைய செல்வாக்கும் அதிகாரமும் நின்றவிடம் தெரியாமல் மறைவதைக்கண்டு ஏங்கினர். தலைவிரி கோலமாக வேவல் பிரபுவிடம் ஓடி, சாஷ்டாங்கமாகப் பணிந்து ஓலம்! ஓலம்! என்று அரற்றினர். அவர்களுக்கு சாட்சாத் வேவல் அபயம் அளித்தார்.

### பிறவிக்குணம்

யார்குடி கெட்டால் என்ன! மற்றவர்களின் இரத்தத்தைக் கசக்கிப் பிழிந்து தாம் மாத்திரம் நல்லாக வாழவேண்டிக் கருமம் ஆற்றுவது பிரிட்டிஷ் இராஜதந்திரம்! தோலிருக்கச் சுளைவாங்கும் தந்திரம் இது! பிரித்தாளும் பொல்லாத தந்திரம் இது! அந்தகைய தந்திரத்தைக் கடைப்பிடிக்கும் மரபில் வந்தவர் வேவல் துரை! இனிக்கப் பேசி, வயிற்றில் அடிக்கும் பிரிட்டிஷ் இராசதந்திரிகள் மரபில் தோன்றிய வேவல் ஆழ்ந்து யோசிக்கலானுர். காங்கிரசின் அதிகார வீற்றை எவ்வாறு அடக்கலாம் என்பதை யோசித்த வேவல் பிரபு ஜின்னு சாய்புவை போபால் நவாப் மூலமாக அண்டினுர். எப்படியாவது இடைக்கால அரசாங்கத்தில் முஸ்லிம் லீக்கைச் சேர்த்துவிட்டால், பின் அங்கே போராட்டத்தை உண்டாக்கிவிட்டு பூனைகளுக்கு வெண்ணெய் பகிர்ந்து கொடுத்த குரங்கினைப்போலத் தாம் சர்வாதிகாரம் நடாத்தலாம் என்று வேவல்துரை நிச்சயித்தார். முஸ்லிம் லீக்கினரை இடைக்கால அரசாங்கத்திற் சேர்த்தார்.

### பரபரம் ஆட்டுகிறுர்

லீகர் இடைக்கால அரசாங்கத்திற் சேர்ந்ததும், இதுவரை பண்டிதர் நேருவும் அவரது சகாக்களும் வகுத்த சம்பிரதாயங்கள் எல்லாம் காற்றிற் பறந்தன. பண்டிதர் நேருவைப் பிரதம மந்திரி என்று லீக்கர் ஒப்புக்கொள்ள மறுத்தனர். சம்பிரதாயங்களாவது! கத்தரிக்காயாவது! என்று, தாம் இராஜப் பிரதிநிதி ஒருவர்க்குத்தான் பொறுப்பென்று சொல்லித் தம் மனம்போனபடி கருமம் ஆற்றினர். பண்டிதர் நேருவும் சகாக்களும் பொறுத்துப் பார்த்தனர். லீகர்களின் விடாகண்டத்தனத்தை வேவலுக்கு அறிவித்தனர். வேவல் துரை கண்மூடி மவுனியாக இருந்தார். தன் இராச தந்திரச் சூழ்ச்சி பலிப்பதை அவர் தம் கண்ணுற்கண்டு மகிழ்ந்தார். இப்படி எல்லாம் லீகர்கள் தம் எண்ணப்படி நடப்பாரானுல், அதனைக் கண்டும் காணுதவர்போல் இராஜப்பிரதிநிதி நடப்பாரானுல், தம் பதவிகளை உதறித் தள்ளத் தாம் தயார் என்பதையும் ஒன்றுக்கு இருமுறை பண்டிதர் நேரு வேவலுக்கு அறிவித்தார் இந்த அளவிலே வேவல் பிரபு இன்று இடைக்கால அரசாங்கத்தை நடத்துகிறுர்.

### அரசியலில் நிர்மாணசபை

இடைக்கால அரசாங்கத்தின் செய்தி இவ்வாறுக, வருங்கால இந்தியாவின் அரசியலமைப்பைத் தயார் செய்யவேண்டிய அரசியல் நிர்மாண சபை வருகிற 9-ந் திகதி கூடவிருக்கிறது. இந்த நிர்மாணசபையில் லீகர்கள பங்குபற்ற முடியாது என்று ஜின்னு சாய்பு அறிவித்துவிட்டார். இடைக்கால அரசாங்கத்தில் லீகர் சேர ஒப்புக்கொண்டபோது, நீண்டகால திட்டத்திற் பங்குபற்றவேண்டும்என அவர்களுக்கு இராஜப் பிரதிநிதி மூலமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இடைக்காலத் திட்டமும் நீண்டகாலத் திட்டமும் ஒன்றுக்கொன்று பின்னப்பட்டுள்ளன. ஒன்றை ஏற்று மற்றதை நிராகரிப்பது முடியாது. லீகர்கள் நீண்டகாலத் திட்டத்தை ஒப்புக்கொண்டு விட்டார்கள். அவர்கள் அரசியல் நிர்மாண சபையிற் பங்குபற்றுவர் என்ற உத்தரவாதத்தை இராஜப்பிரதிநிதி பண்டிதர் நேருவுக்கு அளித்துள்ளார். அந்த உத்தரவாதம் அப்படியிருக்க, நீண்டகாலத் திட்டத்தில் பங்குபற்ற முடியாது என்று ஜின்னு சாய்பு இன்று கூறுவதன் காரணம் என்ன?

### இனி நடப்பது என்ன?

லீகர்கள் பங்குபற்றினுல் என்ன விட்டால்என்ன? அரசியல் நிர்மாண சபைக்கூட்டம் வருகிற 9-ந் திகதி நடக்கத்தான் போகிறது. அதனைப் பண்டிதர்நேரு பட்டவர்த்தனமாகத் தெரிவித்துவிட்டார். அந்தச் சபையின் பிரதிநிதிகளுக்கு அழைப்புப் பத்திரங்களும் விடப்பட்டிருக்கின்றன. ஆனுல் லீகர்கள் அரசியல் நிர்மாண சபையைப் பகிஷ்கரித்தால், அவர்களுக்கு இடைக்கால அரசாங்கத்திற் சேர எவ்விதமான யோக்கியதையு மில்லை. இராஜப்பிரதிநிதி வேவல் இதனை லீகர்களுக்குப் பட்டவர்த்தனமாகத் தெரிவித்து அவர்களை உடனே நீக்கவேண்டும். பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும் தந்திரம் இனியும் நிலவுமானுல் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்துக்கே ஆபத்து நேரும் என்பதை வேவல்துரை இப்போதாவது உணர்ந்து கொள்ளுவாராக. பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. இதுவரை பண்டிதர் நேருவும் இந்திய மகாஜனங்களும், பிரிட்டிஷ் இராஜதந்திரிகளும் இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் ஐ. ஸி. எஸ் வர்க்கமும், ஜின்னுவின் உதவியோடு செய்துவந்த தகிடுதத்தங்களைக் கண்டு வெறுப்படைந்திருக்கின்றனர். இனியும் இவை நடக்குமானுல் காங்கிரஸ் இடைக்கால அரசாங்கத்தை விட்டு வெளியேறும். அப்படி வெளியேறுமானுல் இதுகாறும் நிகழ்ந்தன போன்ற போராட்டங்கள் நடைபெறமாட்டாது ஊழிக்கனல் என இந்தியமக்களின் ஆத்திரம் பொங்கும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் அதன்வாலைத் தொட்டுத் தொங்கும் ஜின்னுக் கும்பலும் அந்த ஊழிக்கனலில் வெந்து சாம்பராவது நிச்சயம்.

### குட்டிக்கரணம்!

அரசியல் நிர்மாண சபையைப் பகிஷ்கரிப்பது என ஜின்னுசாய்பு கூறிவிட்டார், தம்முடைய சகாக்களுக்கும் கட்டளை யிட்டுவிட்டார். ஆனுல் இந்த மகாநுபவருடைய பழையசம்பவங்களை நோக்குமளவில் இது ஓர் வெருட்டு என்றேஅநுமானி

தொடர்ச்சி 5 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பகவான் ஸ்ரீரமண மஹர்ஷிகள்

தீராநோய் தீர்த்தருளுந் தீரன் றன்னைத்
திருவிழியாற் றீவினைக டீர்ப்பான் றன்னை
யாராலு மளவிடுதற் கரியான் றன்னை
யாவர்க்கு மணுகுவற் கெளியான் றன்னைப்
பாராரும் விண்ணாரும் போற்று வானைப்
பக்தர்களும் மூக்தர்களும் பரிந்துபோற்றுஞ்
சீரானை ஸ்ரீரமண தேவன் றன்னைச்
சிந்தித்துப் பந்தமறுத் துய்வோம் யாமே.

—க. இராமச்சந்திரன்

# உலகின் சிறந்த புருஷர்

## ஜவஹர்லால்தான் என்கிறார் பிரிட்டிஷ் அறிஞர்

மிஸ்ரர் பென்னர் பிராக்வே என்பவர் பிரபல பிரிட்டிஷ் எழுத்தாளர்; அவர் சில நாட்களுக்கு முன் இங்கிலாந்தின் சுயேச்சைத் தொழிற் கட்சிப் பத்திரிகை ஒன்றில், இந்திய அரசாங்கத்தின் பிரதமராயுள்ள பண்டிதர் ஜவஹர்லால் நேருவைப்பற்றி ஓர் சிறந்த கட்டுரை எழுதியுள்ளார்.

பண்டிதர் நேரு இந்தியாவுக்கு மாத்திரம் சிறந்தவரல்ல; அவர் அகில உலகத்துக்குமே வழிகாட்டியாய் விளங்கப்போகின்ற ஓர் மகாநுபவர். அவர் தம்முடைய வாழ்க்கையின் சேவைகளை இன்னும் பூர்த்தியாக்கவில்லை. அவர் செய்யவேண்டிய தொண்டுகள் இன்னும் எவ்வளவோ உண்டு.

இன்று இந்த உலகில் விளங்கும் தலைவர்களிலே பண்டிதர்ஜவஹர்லால் நேருவைப்போன்ற ஆழ்ந்த அறிவு, கூர்ந்த அரசியல் ஞானம் படைத்த வேறும் அரசியல்ஞானிகள் உளரோ வென்பது சந்தேகம். இன்று உலகத்திலே விளங்கும் அரசியல் ஞானிகளில் முதல் ஸ்தானம் அவர்க்குத்தான் கொடுக்கவேண்டும், உலகில் அடிமைத்தளை நீங்கிப் பொருளாதார சுபீட்சம் ஓங்கவேண்டுமானால் பண்டிதர் நேரு உலக அரங்கத்தில் தலைமை வகிக்கவேண்டும்" என்று மிஸ்ரர் பிராக்வே குறித்த அக்கட்டுரையிற் கூறுகின்றார்.

## 290 பேர் மாத்திரமே

சென்ற சனிக்கிழமை மலாய்நாட்டிலிருந்து வந்த கப்பலில் 1200 இலங்கையர் வருவர் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் குறித்த கப்பலில் வந்து கொழும்பில் இறங்கிய பிரயாணிகளின் தொகை 925 தான். இவர்களில் இலங்கையர் ஆக 290 பேர் மாத்திரமே மீதியானவர்கள் இந்தியர்.

மலாய்நாட்டிலிருந்து இலங்கைக்கு வரவிருந்த இலங்கையரில் அநேகர்க்கு லீவு கிடைக்காமற் போய்விட்டது. இன்னும் பலர் தங்கள் பிள்ளைகளுக்குரிய லீவுக் காலம் வரவில்லை என்பதால், அவர்களுடன் வரமுடியாமல் விட்டது.

## அடுத்த பொலிஸ் தலைவர்

### அலுவிகாரைக்குப் பத விகிடைக்குமா?

இப்போது பொலிஸ்பகுதித் தலைவராகவுள்ள R. R. M. பேக்கன் என்பவரை, அவருடைய காலவெல்லைக்கு முந்தியே பதவியினின்று நீக்கி, அவருடைய இடத்துக்கு ஓர் இலங்கையரை நியமிக்கவேண்டும் எனறு உள்நாட்டு மந்திர நிருவாகசபையினர் ஆலோசித்து வருகின்றனர் என்று தெரிகிறது.

குறித்த நிருவாகசபையின் கூட்டம் ஒன்று சென்ற வெள்ளிக்கிழமை நிகழ்ந்தது. மந்திரி மகாதேவா நிலைமையை அங்கத்தவர்களுக்கு விளக்கினார். மிஸ்ரர் பேக்கன் தம் கடமையைச் சரிவரச் செய்யவில்லை என்ற விஷயத்தில் எல்லா அங்கத்தவர்களும் ஒரேவிதமான மனப்பான்மை யுடையவர்களாக விருக்கின்றனர். ஆனல் அவரை நீக்கிவிட்டால், அவருடைய இடத்துக்கு யாரைநியமிப்பது என்ற கேள்வி பிறந்தது. இனி நியமிக்கப்படும் பொலிஸ் தலைவர் இலங்கையராகவே இருக்கவேண்டும் என்று எல்லாரும் அபிப்பிராயம் தெரிவித்தனர். இப்போது இலங்கையில் மிக்க திறமையான ஓர் சிவில் சேர்விஸ உத்தியோகஸ்தர் இருக்கிறாராம். இவரையே இப்பதவிக்கு நியமித்தால் என்ன என்று ஓர் ஆலோசனை கூறப்பட்டது.

இந்தத் திறமையான சிவில் சேர்விஸ் உத்தியோகத்தர் யார் என்பது பகிரங்கமாக்கப்படவில்லை. ஆனால், மத்திய மாகாணத் தலைவரான மிஸ்ரர் அலுவிகாரை சிவில்சேர்விஸ் உத்தியோகத்தராக வரமுன்னர், 1914ம் 1918ம் மகாயுத்தத்தில் இராணுவத்திற் கடமை பார்த்தவர், இவரை அடுத்த பொலிஸ் தலைவராக்கலாம் என்றும் ஓர் வதந்தி பிறக்கிறது.

## சிலாபம் உப-தேர்தல்

சிலாபப் பகுதிப் பிரதிநிதியாக அரசாங்கசபையில் இருந்த மிஸ்ரர் ஜி. வி. எஸ். கொறியா, தம் பதவியை விட்டு இங்கிலாந்துக்குச் சென்றிருப்பதால், அப்பதவிக்கான உபதேர்தல் ஜனவரிமாதம் 18ம் திகதி நடைபெறும். முதலியார் வி எ அப்பாத்தின, [illegible] வரும் அந்த [illegible] மூன்வர் திருக்கிறார்கள்.

# வீரத் தமிழ் மகன்

## சேர். பொன். இராமநாதன்

"பொன்னம்பலம் ராமநாதன்; K. C.; C. M. G. இலங்கைச் சட்ட நிருபண சபை அங்கத்தவர்: அவருடைய இவ்வுருவச் சிலை பொது ஜனங்களின் பணஉதவி கொண்டு நிறுவப்பட்டிருக்கிறது".

மேலே சொல்லிய வாக்கியங்கள் பொறிக்கப்பட்டுள்ள தளத்தின்மீது விளங்கும் சேர். பொன். இராமநாதப் பெருந்தகையாரின் உருவச்சிலை இன்று, கொழும்பு அரசாங்கசபைக் கட்டிட மைதானத்தில், இலங்கைத் தேசாதிபதியினுல் திறந்து வைக்கப்படும்.

அரசாங்கசபையின் இன்னோர் பாகத்திலே, பெய்ரா வாவிப்பக்கமாக விளங்குவது இவருடைய தம்பியார் சேர். பொன். அருணாசலத்தின் சிலை.

இந்த இலங்கையின் அரசியல் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டுப் பெரிதும் உழைத்தவர் சேர். பொன். இராமநாதன். இன்று இந்த இலங்கை தமக்கென்று வாதுபுரிந்து தமது சிம்ஹக் கொடியைப் பறக்கவிட்டு, ஜம்பம் பேசும் சிங்கள அரசியல் வாதிகள் யாவரும், அரசியலின் அரிச்சுவடிதானும் அறியாது இருந்த காலத்திலே அவர்கட்கு ஊக்கம் கொடுத்து, புத்துயிர் அளித்த மகான் சேர். பொன். இராமநாதன்.

சேர். பொன். இராமநாதன் அவர்கள் தமது பரந்த அரசியல் ஞானத்தால், தம்முடைய தியாக சிந்தையால், சரி என்பதைக் கடைசிவரை சாதிக்கும் வன்மையினுல் அவர் மனிதர்க்குள் மாணிக்கமென விளங்கினார், கேவலம் பட்டங்களுக்காகவும், பதவிகளுக்காகவும் அவர் தம்முடைய சுய மரியாதையைத் துறந்து தம் சொந்தச் சகோதரர்க்குத் துரோகம் செய்யவில்லை. தமிழன் என்று சொல்வதில் பெருமையாக நின்றவர், "தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா" என்று நாமக்கல் வீரக்கவிஞர் கூறியாங்கு தமிழ் மக்களுக்குத்தனி மதிப்புப்பெற்றுக்கொடுத்தசிங்கேறு இன்று எங்கள் தமிழ் மக்களிலே ஜனத்தலைவர்கள் என்றிருப்பவர்களிற் சிலர் இந்தப் பெருந்தகையின் பெயரைச் சொல்லி எங்கள் தமிழ்ச் சாதியத்துக்கே ஓர் பெரும் இழுக்கைத் தருவிக்கிறார்கள்.

28 வயதில் சேர். பொன், இராமநாதன் இலங்கைச் சட்டசபையில் தமிழ் மக்களின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். 1892-ம் ஆண்டில் இலங்கை சொலிசிற்றர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். நாலு வருஷமாக அப்பதவியில் இருந்தபோது பலமுறை அற்றோணி ஜெனரலாகவும் கடமை பார்த்தார்.

1905-ம் ஆண்டில் சேர் இராமநாதன் அரசாங்க சேவையை விடுத்து அமெரிக்காவுக்குச் சென்றார். அங்கே அவர் தமது பிரசார வன்மையினுல் தமிழ் மக்களின் சிறப்பையும் சைவத்தனி மதத்தின் மாண்பையும் அமெரிக்க மக்களுக்கு எடுத்துரைத்தார்.

அமெரிக்காவில் இருந்து மீண்டதும், இலங்கைச் சட்ட நிருபண சபையை ஜனநாயக ஸ்தாபனமாக்க வேண்டும் என்று வாதிட்டார்.

1911ம் ஆண்டில், இலங்கை மக்கள் [illegible] பிரதிநிதியாகச்சட்ட [illegible] க்குத் தெரிந்தெடுக்கப்பட்டார். அவரைச் சிங்கள மக்கள் தங்கள் சொந்த மனுஷனுக்கு எதிராக ஆதரித்து அவரைச் சட்டசபைக்கு அனுப்பினர்.

1911-ம் ஆண்டு தொடக்கம் 1921-ம் ஆண்டுவரை அவர் இலங்கைக்குப் பொதுவாகவும் சிங்களர்க்குச் சிறப்பாகவும் செய்துவந்த வேலைகளை எவரும் மறக்க முடியாது. 1915ம் ஆண்டிலே, இன்று தாமே இலங்கையின் தலைவர்கள் என்று தம்பட்டம் அடிக்கும் பிரகஸ்பதிகள் யாவரும் சிறையில் தவித்தபோது அவர்களை மீட்ட பெருந்தகையாளர் எங்கள் இராமநாதன் என்பதை இந்த மேதாவிகள் மறந்துவிட்டனர்.

அரசியல் விஷயத்தில் மாத்திரமன்றி, கலைவளர்ச்சி விஷயத்தில் இராமநாதப் பெருந்தகை செய்த தொண்டுகள் அபாரமானவை. இராமநாதன் பெண்கல்லூரி, பரமேஸ்வரக் கல்லூரி என்ற இரு ஸ்தாபனங்களும், அவரைத் தமிழ் மக்களுக்கு சதா ஞாபகமூட்டி நிற்கும்.

சேர். இராமநாதன் சமாதியடைந்த தினம் 1930-ம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ந் திகதியாகும்.

# இலங்கை-இந்திய தொடர்பு

## ஆச்சார்ய கிருபாலினியின் நம்பிக்கை

அகில இந்தியக் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் தலைவர் ஆச்சார்ய கிருபாலினி இலங்கை, பர்மா நாடுகளைப்பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:— இலங்கையும், பர்மாவும் நம் அயல் நாடுகள். பர்மாவைப்போன்றே இலங்கையும் இந்தியாவிலிருந்து பௌத்த மதத்தை மேற்கொண்டது. அது இந்தியாவுடன் ஒன்றுபட்ட நாடு. இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாணத்திற்கும், தாய் நாடாகிய இந்தியாவின் தென்பகுதிக்கு மிடையே வித்தியாசமே காணமுடியாது. சிலகாலம்வரை இலங்கையில் இருந்து இந்தியத் தொழிலாளரை வெளியேற்ற அங்கு முயற்சிகள் நடைபெற்றது துரதிர்ஷ்டவசமானதே. 1946ம் வருஷம் மார்ச் மாதத்தில் காங்கிரஸ் காரியச்சபை, ஸ்ரீ அரியநாயகத்தையும், திரு ஜி. இராமச்சந்திரனையும் இலங்கைக்கு அனுப்பி நிலைமையைப் பரிசீலனை செய்தது பண்டித நேரு, ராஜாஜி முதலியவர்களையும் அங்கு அனுப்புவதாக இருந்தது. அவர்கள் பல முக்கிய கருமங்களால் அங்கு போக இயலாமற் போய்விட்டது. இலங்கை இந்தியர் பிரச்சினைக்கு ஒரு பரிகாரம் காணமுடியாதென்பது நினைக்கத்தக்கதல்ல இலங்கை இந்தியா இரண்டின் லட்சியமும் ஒன்றே. இந்தியாவிலிருந்து அந்நாடு துண்டிக்கப்பட்டால் ஏகாதிபத்திய வல்லரசுகளால் விழுங்கப்படும் அபாயம் நேரிடும்".

## சுபாஷ் நகர்

கல்கத்தா நகரசபை, சுபாஷ் சந்திர போஸின் உருவச்சிலை ஒன்றைச் சலவைக் கல்லினுற்செய்வித்து நகரத்தின் பகிரங்கமான இடத்தில் நிறுவத் தீர்மானித்திருக்கிறது. இந்திய சுதந்திரச் சேனையின் சேனுபதியாக இராணுவ உடையுடன் போஸ் நிற்பதாகக் காட்டும் இச்சிலை, கல்கத்தா என்று இப்போதுள்ள பெயரை நீக்கி சுபாஷ் நகரம் என்று பெயர் வழங்கவேண்டும் என்றும் ஓர் காங்கிரஸ்வாதி நகரசபையில் ஓர் தீர்மானம் கொண்டுவந்தார். இது சட்ட நிபுணரின் ஆலோசனைக்கு விடப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொற்கைக் குபேரன்

(த. இராசையா, கோழும்பு)

இது பொருட்சுவை, சொற்சுவை, நகைச்சுவை, நடனச்சுவை முதலியன பொதிந்த ஒரு சிறு நாடகம். இதனைச் சென்றவாரம் 9-ந் திகதி கொழும்பு அர்ச். சூசையப்பர் உயர் கலாசாலை மாணவர் தம் மண்டபத்தில் நடிக்கக்கண்டு இன்புற்றேன். இந்நூலை எங்கே வாங்கலாம்?

கதைச் சுருக்கம் இது:—

அறவணர் என்ற ஒரு பேர்பெற்ற யாழ்ப்பாண முனிவர் கொற்கைவேந்தன் செழியனைக் காணப் போனபோது தன் செல்வத்தினுல் தானே உலகில் மிக்க பாக்கியவான் என்று எண்ணிய செழியன் கேட்ட கேள்விக்கு "ஒருவன் சீவியம் இனிதாய் முடியும்வரையும் அவன் பாக்கியவானே அல்லனேவென்று எவராலும் சொல்லமுடியாது" என்று அவர் விடை பகர அவன் கோபிக்கிறுன். அன்றிரவே அவன் தேவியால் வேலையில் நின்று விலக்கப்பட்ட இலக்குமி என்னும் செவிலி மூன்றுவயதுடைய கோமகளுடன் கரந்துசெல்கிறுள்.

பதினைந்து ஆண்டுகளின்பின் கொற்கை நகர் கரிகாற் சோழனுல் முற்றுகையிடப்படுகின்றது. பல மாதமாகியும் பட்டினத்தைப் பிடிக்கமுடியவில்லை. உதயணன் என்னும் அரசகோமாளி சொன்ன ஒரு குறிப்பைப் பிடித்து தன் சேனைகள் பாசறை முதலிய கழற்றி தம் தேசமார்க்கமாய்ப் போகும்படி கற்பிக்கிறுன் கரிகாலன். இதனுல் ஏமாற்றமடைந்த செழியன் தன் வீரரைத் தம்மில்லங்களுக்கனுப்பி இவ் "வெற்றியை" நகரில் கொண்டாடும்படி கட்டளையிடுகிறுன்.

ஒன்றைச் சுற்றி ஒன்ருயிருந்த மூன்று நகர மதில்களின் கபாடங்களைத் திறப்பிக்க உதயனன் மாறுவேடம் பூண்டு ஒரு பாரமான மூட்டையைக் காவிக்கொண்டு வெளிமதிலுள் புகுந்ததும், சேவகர் பிரதானி அவனைக் கள்வன் என்று நிற்பாட்ட மூட்டையில்மாணிறைச்சிதான்" என்று உதயனன் கூற, பிரதானி மூக்கைப் பிடித்துக்கொண்டு விரைந்து நீங்குகிருன்; சாக்கை அவிழ்க்க மாதவி வெளிவர, இருவரும் எஞ்சிய இரு கதவுகளையும் திறக்க வழி தேடுகிருர்கள். கொண்டாட்டத்தில் ஈடுபட்ட நகரவாசிகள் நன்ருய்க் குடித்து வெறித்துக் கிடக்கிருர்கள்.

பின் மூன்றும்மதிற் காவலர் பாடியாடிக்கொண்டிருக்கையில் உதயனன் ஒரு காவுதடியில் மயக்க மருந்திடப்பட்ட கட் குடங்களைக் கொண்டுவர அவற்றைத் தாகம் மிகுந்த காவற் சேவகர்பற்றிக் கள்ளைக்குடிக்கமாதவி வந்து நடனமாட, காவலர் மதில் திண்ணையில் அயர, அவள் மதிற்கதவுத் திறவுகோலைத் தடவி எடுத்துக் கொடுக்க, உதயனன் அக்கதவைத் திறக்க, கரிகாலனுடைய சேனைகள் திரும்பிவரும் நேரமாகிறது. பகைவர் நகரைக் கைப்பற்றி எரிக்கச் செழியனும் அவன் ஊமைக்குமாரன் இளஞ்செழியனும் கைதிகளாக்கப் படுகின்றனர். தந்தையை ஒரு வீரனின்று காக்கும்வேளை ஊமைப்பிள்ளை பேசத்தொடங்குகிறது,

ஏழாம் களத்தில் செழியனைத் தீயிலிடப்போகிருர்கள், இதைக் கேள்வியுற்ற இளஞ்செழியன் தற்கொலைபுரிந்தான் என்னும் செய்தி வருகிறது. அறவணர் படிப்பித்த பாடத்தைஇப்போதுதான் நினைவுகூர்ந்த செழியன் 'அறவணு! அறவணு! என்று புலம்புவதை உதயனனுடனும் மாதவியுடனும் வந்த கரிகாலன் கேட்டு, விசாரித்து அவனை விடுதலைசெய்து தன் நண்பனுமாக்குகின்ருன். மாதவி செழியன் இழந்த 'கோமகள் எனத் தெரியவருகிறது. அவளுக்கும் உதயனனுக்கும் விவாகம் நடக்கப்போகிறது. இத்துடன் கதை இனிதாய் முடிகின்றது.

மெல்லவாய் உற்பத்தியாகி,பெருகி விரைந்திரைந்து கடலை அடையும் பேராற்றினைப்போல் இந்நாடகத்தின் போக்குபோகிறது பள்ளிக்கூடப்பிள்ளைகள் இதைநடிக்கும்போது இவ்வளவு மனோகரமாய்த் தோன்றுமாயின் வளர்ந்த தேர்ச்சியடைந்த நடிகர் இதை நடித்தால் எத்துணைச் சிறப்பாயிருக்குமென்று ஆச்சரியப்பட வேண்டியதாயிருக்கின்றது. யாழ்ப்பாண, பாண்டி, சோழ நாடுகளுக்குப் பெருமையும் அளிக்கின்றது இச்சிறு நாடகம்


## வெளிவந்துவிட்டது! வெளிவந்து விட்டது!

புத்திப் பரீட்சைகளைப்பற்றிய கவலை தீர்ந்தது

புத்திப் பரீட்சை முறைகளில் அநுபவம் மிகுந்தவரும்
அரசினர் ஆசிரியகல்லூரி அதிபருமாகிய

**திரு. யூ. ஜீ. பி. டி. சில்வா**

அவர்கள் எழுதிய

### "புத்திப் பரீட்சைகள்"

என்னும் சிறந்த தமிழ்நூல் வெளிவந்துவிட்டது

**V—VIII ம் வகுப்புப் பரீட்சைகளுக்கு ஏற்றநூல் இதுவே**

நல்ல கடிதம் : அழகான அச்சு : விலை ரூபா 1-25

பிரதிகள் தேவைப்படுவோர் கீழ்க்
கண்ட விலாசத்திற்கு எழுதுக:

எம். டி. குணசேன அன்ட் கொம்பனி லிமிற்றெட்,
புத்தகவியாபாரிகள்.
தபாற்பெட்டி 246, 217 கொறிஸ்ரோட், கொழும்பு

(Mis 231 26)


# இதிலும் பட்சபாதகமா

## தமிழ் ஆசிரியர்கள் குறைந்தவர்களா?

(தமிழன் எழுதுவது)

இப்போது போதிய உழுந்து பயறு முதலிய வெஞ்சனப் பொருள்கள் வந்திறங்கியிருப்பதாகவும், அவைகள் ஐக்கிய சங்கக் கடைகள் மூலம் பொதுசனங்களுக்குக் கொடுக்கப்படுமெனவும் பத்திரிகைகளில்பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனல் இவற்றைவிடப் பிரதானபகுதிக் காரியாதிகாரிகளின் (D. R O's) கந்தோர்களிலிருந்து, விசேஷ, அவசர தேவைகளுக்காக உத்தரவுச் சீட்டுகளின் (Permits) மூலம் டை பொருள்களை ஒவ்வொரு பிரதான பகுதியிலுள்ளாரும் பெற்று வந்திருக்கின்றனர்.

இப்போது சிலநாட்களின் முன் வீட்டுப் பாவிப்புக்கென உழுந்து கொடுபடுவதாகத் தலைமைக்காரர்மூல மறிந்த சில தமிழ்ப்பாடசாலை யாசிரியர்கள் (இவர்கள் தலைமைக்காரனுக்குக் கீழ்க் கணக்கெடுப்பு முதலியவற்றில் உதவி செய்தவர்கள்) அனுமதிச்சீட்டுப் பெறும்படி சென்ருர்களாம். அதற்கு இந்த வலிகாமம் மேற்குப் பகுதியிலுள்ள கந்தோர்க் காரர்கள் உழுந்து முடிந்துவிட்டதென்று கூற அவர்கள் திரும்பி வந்துவிட்டார்களாம். பின்னர் விசாரணை செய்ததில், ஆங்கில பாடசாலைகள் கல்லூரிகளின் ஆசிரியர்களின் நாம அட்டவணையொன்று தயாரித்து, அவர்களை வந்து உழுந்து பெற்றுப் போகுமாறு கூறியதாக அறிய வருகின்றது

பனியில் தோய்ந்து வெயிலிற் காய்ந்து (Enumeration) கணக்கெடுப்பு, மதிப்பெடுப்பு, கூட்டங்கள் தோட்ட விருத்திகள் முதலான தங்கள் கருமங்களைப் பார்க்க இந்தத் தமிழாசிரியர்களைக் கட்டிப்பிடிக்கின்ருர்கள். தடிமன், இருமல் நெஞ்சுநோ என்று உண்மையைச் சொல்லி இரண்டு இருத்தல் உழுந்துக்குப் போனல் இல்லையென்று கையை விரித்து, ஆங்கில ஆசிரியர்களுக்கு வெற்றிலை வைத்துச் சொல்லிக் கூப்பிட்டுக் கொடுக்கிறுர்களாம்! ஆங்கில தமிழ் வித்தியாசத் தடிப்பு இப்படியுமாதாண்டவமாடுகிறது? ஒருகண் மூடி ஒரு கண் விழிக்கும் இந்தச் செய்கை உண்மைதானு?

இந்தச் செய்தியை ஆங்கில ஆசிரியர்களில் யாரையாவது கண்டுகேட்கலாமென்ருல் தமிழிற் பிறந்து தமிழில் வளர்ந்து தமிழைப் பேசும் தமிழுணர்ச்சியுள்ள தமிழனுக்குவெட்கமாயிருக்கின்றது. ஆதலின் இது உண்மைதானு என்பதுபற்றியறிந்து ஆவன செய்யுமாறு அரசாங்கத்தையும் எங்கள் அரசாங்கசபைப் பிரதிநிதிகளையும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

## ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி

ஐக்கியநாடுகள் மகாநாட்டில் இந்தியப் பிரதிநிதிகள் கோஷ்டியின் தலைவியாகவுள்ள ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி அடுத்தமாதம் முதற்பகுதியில் இந்தியாவுக்கு மீளுவார் என்று தெரிகிறது.


## விளம்பரம்

யாழ்ப்பாணத்தை நோக்கி சாவகச்சேரி புகைரத ஸ்தானத்திலிருந்து முதலாம் கைகாட்டி மரத்துக்கு அருகாமையில் ஓர் நாற்பது அடி நீளமுள்ள சிவரும், ஆரைக்குள வாய்க்காலை ஆளமாக்குவதும், பள்ளம் திட்டியில்லாமல் ஒரே சமபூமிக்குக் கொண்டுவருவதைச் செய்வதற்கு வடமாகாணப் பகுதி ஏஜண்டு அவர்கள் 1946ம் ஆண்டு மார்கழிமாதம் 17-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 12 மணிக்குள் குறித்த (ரெண்டர்) விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

விண்ணப்பப் பத்திரங்கள் ரூபா 25 கட்டி வடமாகாண ஏஜண்டரிடம் பெற்றுக்கொண்ட பத்திரங்களில் எழுதப்பட வேண்டும். மறுவிபரங்களையும் அவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ம. ஸ்ரீகந்தா,
வடமாகாண ஏஜண்டு அவர்கட்காக,
கச்சேரி,
18.11.46 G 117 26


## படாடோபம் இல்லை!

அடுத்த ஆண்டிலே புதிய அரசியலை அங்குரார்ப்பணம் செய்யும்போது, அதனை மிகவும் ஆடம்பரமாக நடத்த வேண்டும் என்று இலங்கையரசாங்கம் ஏற்கெனவே தீர்மானித்திருந்தது. அடுத்த ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தில் இந்தச் செலவுக்கென 25 லட்சம் ரூபா ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. ஆனல் இத்தொகை போதாது எனக் கண்டால் மேலதிகமாகச் செலவழிப்பது என மந்திரிகள் தீர்மானித்திருந்தனர்.

இந்த அங்குரார்ப்பண விழாவின் போது அயல்நாட்டுப் பிரமுகர்களையும் அழைப்பது என்று மந்திரசபையினர் தீர்மானித்திருந்தனர்.

இப்படியாகவெல்லாம் படாடோபமாக ஆயத்தங்கள் செய்துவிட்டு, மந்திரசபையினர் தங்கள் முந்திய தீர்மானத்தை இப்போது மாற்றிவிட்டார்கள் என்று தெரிகிறது.

சேர். ஒலிவர் குணத்திலகா இங்கிலாந்திலிருந்து மீண்டதும் இப்படியான செலவுகளை இப்போது நாடு இருக்கும் பொருளாதார முறையில் செய்வது உசிதமில்லை என்று ஆலோசனை கூறியதாகத் தெரிகிறது. அவருடைய ஆலோசனையின் பயனுகவே மந்திரசபையினர் தமது முந்திய தீர்மானத்தை மாற்றிக்கொண்டனர்.


## காணி விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு 269ம் இலக்க பராபரிப்புத் தத்துவ வழக்கில் கோட்டின் உத்தரவின்படி பின்வரும் ஆதன டாப்பில் விபரிக்கப்படும் ஆதனத்தையும் அதிலுள்ள கடைகள்கட்டிடங்களையும் விற்க உத்தரவு பெற்று அதியுயர்ந்த கேள்விக்காரருக்கு விற்க இருப்பதால் குறித்த காணியை வாங்க விரும்புகிறவர்கள் 1946ம் ஆண்டு டிசம்பர்மாசம் 10-ந் திகதிக்குள் மேற்படி கோட்டுச் சக்கிடுத்தாருக்கு அல்லது யாழ்ப்பாணம் சாப்பல் தெரு 25-ம் இலக்கத்தில் பிரக்டர்கள் சரவணமுத்துவும் நடராசாவும் ஆகியோருக்கு தங்கள் கேள்விகளை அனுப்புதல் வேண்டும்.

ஆதனடாப்பு

வண்ணார்பண்ணை கிழக்கிறை செங்கழநீர் ஓடையும், தாண்டிக் குழம்கரையும் அணிஞ்சில்டியும் நில இலா $2\frac{1}{3}$ லைசென்ஸ் பெற்ற உலாந்தா வ. ஆறுமுகம் அவர்களால் 14-9-1942ல் அளவைசெய்யப்பட்ட படத்தின் 2ம் 3ம் 4ம் 5ம் இலக்கத் துண்டுகள் அடங்கியதுமானகாணியும் அதிலிருக்கும் கடைக்கட்டிடங்களும் எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு வேலுப்பிள்ளை ஜெயரத்தினத்தினுதனமும் கணேசபிள்ளையின் உரிமைக்காரரின் ஆதனமும், மேற்கு கணேசபிள்ளையின் உரிமைக் காரரின் ஆதனமும் மறுவும், தெற்கு மீரா மொகிடீனின் ஆதனம் மேற்படி ஆதனம் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இராமலிங்கத்தின் உரிமைக்காரருக்குடையது.

Mis 244 26, 29

## விளம்பரம்

வரணி இடைக்குறிச்சி தினக்கரைப் பகுதியிலிருக்கும் நீர்ப்பெருக்கு வாய்க்கால்களின் அணைகட்டுகளிலிருக்கும்திருத்தங்களைச் செய்வதற்கு வடமாகாணப் பகுதி ஏஜண்டு அவர்கள் 1946ம் ஆண்டு மார்கழிமாதம் 17-ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 12 மணிக்குள் குறித்த (ரெண்டர்) விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

விண்ணப்பப் பத்திரங்கள் ரூபா 25 கட்டி வடமாகாண ஏஜண்டரிடம் பெற்றுக்கொண்ட பத்திரங்களில் எழுதப்பட வேண்டும். மறுவிபரங்களை அவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்,

ம. ஸ்ரீகந்தா,
வடமாகாண ஏஜெண்டு அவர்கட்காக.
கச்சேரி,
18.11-46 G 115 26


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாஜியின் இரத்தம்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கவேண்டியிருக்கிறது; கெஞ்சினுல் மிஞ்சுமிஞ்சினுல் கெஞ்சுஎன்றகொள்கையைக் கடைப்பிடிக்கும் இவர், இன்னும் சில தினங்களில் ஓர் அரசியற் குட்டிக்கரணம் போட்டு அரசியல் நிர்ணயசபையிற் பங்குபற்ற முன்வந்தால் எவரும் ஆச்சரியப்படமாட்டார்; ஒன்றைச் சொல்வது; பின் அதனை மறுப்பது; பின் அதனையே மறுத்து முன் சொன்னதை ஊர்ஜிதப்படுத்துதல், இன்னோன்ன குட்டிக்கரணங்களுக்கு ஜின்னுசாய்பு பேர்பெற்றவரல்லவா? அரசியல் நிர்மாணசபைக்கு இவர் போக மறுப்பதற்குக் காரணம் என்ன?

●

## நாட்டிற் கலவரங்கள்

இப்போது நாடெங்கும் கலவரங்கள் மிகுந்திருக்கின்றனவாம்; இந்தியாவிலே எங்கு பார்த்தாலும் முஸ்லீம்களை ஹிந்துக்கள் கொன்று குவிக்கிறார்களாம்; பீகாரில்மாத்திரம் 20000 முஸ்லீம்கள் எமனுலகம் போய்விட்டார்களாம். இப்படியான நிலைமையிலே இந்தக் கலவரங்களைத் தீர்த்து நாட்டில் சமாதானம் நிலவுவதிலேயே அரசாங்கம் தன் கவனத்தைச் செலுத்தவேண்டும். அதற்காக அரசியல் நிர்மாணசபையைத் தவணைபிடவேண்டும் என ஜின்னுசாய்பு வேவலைக் கேட்டார். இந்த மனுவனின் அகம்பாவம்தான் என்ன? ஜின்னு எப்படிப்பட்டவராயிருந்தாலும், கேவலம் ஓர்பொய்யன் என்று எவரும் இதுவரை எண்ணியிருக்கவில்லை பீகாரில் 20000 மூஸல்மான்கள் இறந்ததை இவர் எப்படிக் கணக்கிட்டார்? அப்படித்தான் இறந்தாலும் அதற்கு ஜவாப்தாரி தான்தான் என்பதை இந்த சாய்பு அறியாரா? முஸ்லீம்கள் இறந்ததை மாத்திரம் கணக்கெடுக்கும் இந்த ஜின்னு வங்கத்தில் நிகழ்ந்த அக்கிரமங்களை அறியாரோ? ஒரு சமயம் மூஸல்மான்களுக்குத்தான் கொலை செய்யத்தெரியும்; மற்றவர்கள் முஸ்லிம் வெறிர்களுக்குப் பயந்து உயிரைக் கையில் ஏந்தி இவர்களுக்குப் பணிந்து நடக்கவேண்டும் என எண்ணினுரோ? பரதனுன ஹிந்து ஸ்தாபித்த பரதகண்டத்தின் உண்மை எஜமானர்கள் ஹிந்துக்கள்தான் என்பதை ஹிந்துக்கள் சமயம் நேரின் காட்டத் தயாராகவிருக்கிறார்கள். மொகலாயப்பகைவர்களைவெட்டியழித்து வெற்றிமாலை சூடிய சிவாஜியின் இரத்தம் இன்னும் ஹிந்துக்களின் நரம்புகளில் ஓடிக்கொண்டுதானிருக்கிறது ஜான்ஸி ராணி லக்ஷ்மிபாயின் சந்ததியார்தான் வீர பாரத மக்கள்! கேவலம் முஸ்லீம் துட்டரின் கைக்குள் அகப்படுவதிலும் பார்க்க உயிர் துறப்பது மேல் என்று பிராணத் தியாகம் செய்த பத்மினி தேவியின் வழித்தோன்றல்கள்தான் ஹிந்துக்கள் என்பதை லீக்கரும், ஜின்னுசாய்புவும், வேவலும் உணருவாராக. சந்திர சூரியரைக் காலந்தோறும் ராகு கேதுக்கள் பீடிக்கலாம்; அதனுல் அவற்றின் பிரபை மங்கமாட்டாது என்பதை ஜின்னுசாய்புவுக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.


உங்கள் வியாபாரம் விருத்தியுற வேண்டுமா?

*

அப்படியானுல்

இந்துசாதனத்தில்

விளம்பரஞ் செய்யுங்கள்


# தேகவியோகம்

## க. சிற்றம்பல வைத்தியர்

யாழ்ப்பாணத்திலே பிரபல வைத்தியராக விளங்கிய இராமப்பிள்ளையவர்கள்பேரனும், வண்ணார்பண்ணை கந்தப்பிள்ளை யுடையாரவர்களுடைய இரண்டாம் புத்திரனும், சிறந்த தமிழ் வைத்தியராக வுள்ளவருமாகிய, வண்மேற்கு நல்லதண்ணீர்க் கிணற்றடி "சின்னத்தம்பி வைத்தியர்" எனவழங்கிய திரு. சிற்றம்பலமவர்கள், தம்மைச் சிலகாலம் பிடித்து வருத்திய நோய்காரணமாக, நேற்று (25 11-46 சோமவாரம்) தமது மனைவி மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் உற்றார் சுற்றத்தார் ஊரவர் எவரும் பிரலாபமுற, தமது இல்லத்திற்றனே இவ்வுலகவாழ்வை யொருவினர். யாழ்ப்பாணத்துள்ள பழைய தமிழ்வைத்தியர்களுள் இவரொருவரே எஞ்சியிருந்தார்; இவருடைய வைத்தியத் திறமை உலகப் பிரசித்தமானது. திரு. சிற்றம்பல வைத்தியரவர்கள் கல்வி யறிவொழுக்கம் தெய்வ வழிபாடு திருத்தொண்டு தொன்மை பாராட்டல் முதலாம் சுகுணங்களும் நற்செயல்களுமுடையவர், நல்லதண்ணீர்க் கிணற்றடியிலுள்ள ஞானவைரவ சுவாமி கோயில் இவருடைய பரிபாலனத்திலே யுள்ளது; வைரவப் பெருமானுக்குத் தொண்டு பூண்டவர்; திரு. தங்கராசா குமாரசுவாமி, டக்ரர் இரத்தினமாகிய மூவரும் இவருடைய புதல்வர்களாவர்; திருவாளர்கள் S. பாலசுப்பிரமணியம், S. சுவாமிநாதன், S. சரவணமுத்து, R. M சின்னையா ஆசிரியவர்களுடைய மனைவியர்களும் குமாரி சாரதாம்பாளும் இவருடைய புதல்வியராவர். இவரது ஈமக்கிரியைகள் இன்று பகல் 11 மணிவரையில் வண்ணார்பண்ணை கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறுமென அறியலானேம். இவருடைய ஆன்மா சாந்தியடைவதாக.

# குடும்பக் கலகங்களைத் தீர்க்க

காவி நீதிஸ்தலத்திலே, சென்றவாரம் முடிக்குரிய நியாயவாதியின் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நிகழ்ந்தது. குடும்பங்களிலே கணவன்-மனைவியர் என்பவர்களுக்கிடையே நிகழும் பிணக்குகளைச் சமரசமாக நிறைவேற்றி அவை, மூற்றி நீதிஸ்தலத்திற் போகாமலிருப்பதற்காக ஓர் சமாசச்சபை நியமிக்கப்படல் வேண்டும் என்று அக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி முடிக்குரிய நியாயவாதி மிஸ்ரர், எல். டீ எஸ் குலாத்தின என்பவரைத் தலைவராகக் கொண்ட ஓர் சமாசச் சபை தெரிந்தெடுக்கப்பட்டது.


நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்

டக்ரர். கெர் உடைய

பற் சுத்தை மருந்துகள்
பற்கோதிப்புக்கான துலிகள்
செயற்கைப் பற்சுத்திச் சூரணம்

தனிவிநியோகஸ்தர்கள்

ஓவர்ஸீஸ்-கொம்மேர்ஷல்
(சிலோன்) எஜென்ஸி
லிமிற்றெட்,
தபாற்பெட்டி இல. 44
167, [illegible]

Mis 242 26, 29


# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவவதாரப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க்கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

அழலெனு மீன வர்க்கத் தறுவருங் குமர னுடன்
முழுவது நோக்கி நோக்கி முதிருமற் புதரீ ரெய்திக்
குழவிக ளென்றே யுள்ளங் கோடல்விட் டகலா தஞ்சி
வழிபடு கடவு ளோரிற் போற்றினர் மனங்கோ ளன்பால்.

அக்கினி நட்சத்திர வர்க்கத்தின ரெனப்படும் கார்த்திகைப் பெண்களறுவருந்; குமாரக்கடவுள் (செய்த) திருவிளையாடல்களை அவ்வப்போது தரிசித்து மிகவும் அற்புதத் தன்மையடைந்தவர்களாய், குழந்தைகளென முந்திக் கொண்டுள்ள கொள்கை முழுவதும் அறவேயொழித்து, அவரை விட்டுப் பிரிதலின்றிப் பயத்தோடு தாம்வழிபடும் குலதெய்வம்போலப்பத்தி பூர்வமாய் வணங்கினரென்பது கருத்து.

கார்த்திகை நக்ஷத்திரம் அக்கினி நக்ஷத்திர மெனப்படுதலின் அழலெனு மீனவர்க்கமென்றார்.

[தாம் வழிபடு கடவுள்போற் றுதித்தாரென்றபடி; இனி, அவரைப் பணிகின்ற பிரமனுதிய தேவர்கள்போலப் பாதுகாத்தாரெனினுமாம்; இவ்வறுவரும் முருகமூர்த்திக்குப் பாலருத்திய பேற்றினல் நக்ஷத்திர பதவியைப் பெற்றனரெனவறிக.] [126]

அம்புய மூறழுஞ் செங்கே ழறுமுகம் படைத்த கோல
நம்பிதன் வரவு தன்னை நவின்றன மினிமே லங்கண்
எம்பெரு முதல்வி தம்பா லிலக்கத்தோன் பதின்மர் சேவ்வேள்
தம்பிய ராகிவந்த தன்மையை விளம்ப லுற்ரும்.

தாமரைமலரை நிகர்த்த செந்நிறத்தோடு கூடிய ஆறு திருமுகங்களைக் கொண்ட பெருமையிற் சிறந்த குமாரக்கடவுளது திருவவதார வரலாற்றை இதுகாறுஞ் சொன்னேம்; இனி, அத்திருக்கைலாய மலையில் (நந்திகணத்தவர்களாகிய) இலக்கத்தொன்பது வீரர்கள் குமாரக்கடவுளின் தம்பிமாராக, எங்கள பெருமை பொருந்திய தாயாகிய உமாதேவியாரிடத்துத் தோன்றிய வரலாற்றைக் கூறத்தொடங்குகின்றேம் என்பது கருத்து.

நந்திகணத்தவர்களுள் இலக்கத்தொன்பதின்மர் தம் வடிவம் மாறி அறுமுகக் கடவுளுக்குத் தம்பியராகத் தேவிமூலம் தோன்றினரேயொழிய கன்மவசத்தாற் கருவாய்ப்பட்டுப் பிறந்திலரென்பர் "எம்பெரு முதல்வி தம்பால் செவ்வேள்தம் பியராகி வந்ததன்மை"யென்றார்; பராசத்தியாதலினும், உலக மாதாவாதலினும் எம்பெரு முதல்வியெனப்பட்டது, இது ஆசிரியர் கூற்று.

[இலக்கத்தொன்பதின்மரும் நவசத்திகளிடத்திற் றோன்றினராக, இங்கே எம்பெரு முதல்வியிடத்து வந்து தோன்றினரெனக் கூறியமை யென்னையெனின். இப்பரிக்கிரக சத்திகளாகிய ஒன்பதின்மரும் தீக்குச் சுடர்போல ஆதிசத்தியாகிய உமாதேவியாரோடு அபின்னமாயிருத்தலினென்க.] [127]

திருவவதாரப்படலம் முற்றிற்று.


வெளிவந்து விட்டது!

படிப்பிக்கும் முறைகளும் விதிகளும்

பேராசிரியர் திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை
அவர்கள் B. A. எழுதியது

பயிற்றப்படும் தமிழ் ஆசிரியர் டரீட்சைக்கும்,
ஆசிரியர் தராதரப்பத்திரப் பரீட்சைக்கும் பாடமாக
விதிக்கப்பட்டுள்ளது

இதன் இரண்டாம்பதிப்பு ஷை நூல்ஆசிரியர்
அவர்கள் செய்த பல திருத்தங்களோடு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார்
வெளியீடாக அச்சிடப்பட்டிருக்கின்றது.

விலை ரூபா 3

மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,


# பட்டப்பகலில் துணிகரக்களவு

நேற்றுத் திங்கட்கிழமை பகல் 11 மணியளவில் கொழும்பு றீகல் படமாளிகை நிதிப் பொறுப்பாளரான ஸ்ரீ வீ மகேந்திரன் ஷை படமாளிகைக்குச் சொந்தமான பணத்தை வங்கியிற் கட்ட, ஓர் றிக்ஷோவிற் சென்றுகொண்டிருந்தார். அவர் பார்ஸன் றோட்டில் திரும்பும்போது ஊதா நிறமுடைய ஓர் கார் அவர்முன் நின்றது. அதில் இருந்தும் இரண்டு மனிதர் இறங்கி, துப்பாக்கியை ஸ்ரீ மகேந்திரனுக்குக் காட்டி அவரிடம் ஓர் பையிலிருந்து 75[illegible] ரூபா [illegible] சதம் ரொக்கத்தையும் 1377 [illegible] 45 சதத்துக்குச் செக்குகளையும் பற்றிக்கொண்டு சென்றுவிட்டனர்.

ஸ்ரீ மகேந்திரன் இன்னேர் பெரியபையில் 12 000ரூபா வைத்திருந்தார். அதுதபாற்காரர் உபயோகிக்கும் பைபோல இருந்தமையினுல் அதற்குள் ஏதோ கடிதங்கள் இருக்கின்றன என்று நினைத்துக் கள்வர் அதனைத் தீண்டவில்லை.

# புடைவைக் கட்டுப்பாட்டதிகாரி

இப்போது புடைவைக் கட்டுப்பாட்டதிகாரியாயுள்ள மிஸ்ரர் எட்மன் றெட்றிக்கோ இந்த ஆண்டுடன் தம் பதவியை விட்டு இளைப்பாற அவரிடத்துக்கு இப்போது "ரயா" கட்டுப்பாட்டு அதிகாரியாயுள்ள மிஸ்ரர் எச் ஜீனதாஸ நியமிக்கப்படுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

# அஜ்மீர் ஜெனரல் அஷூரன்ஸ்

## வீமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

எமது அதிசய சேவையின் அற்புத வெற்றி

| | | |
|---|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 | மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ | 113,00,000—00 | ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 | ,, |
| 1944ம்ஆு வருஷாந்த வருமானம் | 39,45,103—00 | ,, |

ஆயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஈடு, விபத்து
முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது
இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜென்ஸ் தேவை
நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கோடுக்கப்படும்
விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, டொன் கரலிஸ் கட்டிடம்,
91, முதலாம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

Mis 154 29-11-45—30-11(தி)



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்பதும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 12 20-11-46—20-11-'7 (தி)



## கந்தசாமி வைத்தியர்

### அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையுந் தீர்க்கும். பித்தக்கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளைமாற்றி நல்ல பசிஉண்டாக்கும் மேகம் மேசத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக் காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் கழஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்.

**கால் ருத்தல் விலை ரூபா 5-00**

வீ. பீ. பீ. யில் அனுப்புவோம்

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

Mis 211 1-11—30-4 (செ)



## பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:
க. ஆறுமுகம்பிள்ளை
தீ, 156, செக்கம் த்தெரு கொழும்பு

Mis.25 23-4-46 to 22-3-47


## நிஸாம் மன்னர் துயர்

1-ம் பக்கத் தொடர்ச்சி

பிரஜைகளாகப் பிறந்துள்ள ஒவ்வொரு ஆண்மகனும் பெண்மணியும் இப்போது நேர்ந்துள்ள ஆபத்தை உணர்ந்து பாரத நாட்டுக்கு நேர்ந்துள்ள இந்த நெருக்கடியான காலத்திலே சமூக ஒற்றுமையை வளர்த்து, பரஸ்பரம், நல்லெண்ணம், விஸ்வாசம் என்பவற்றைஊக்குவிப்பாராக."

நிஸாம் மன்னரின் உதார குணத்தையும், ஜின்னு சாய்புவின் ஆத்திரப்பேச்சின் தன்மையையும் ஒப்பு நோக்குவார்க்கு ஒரு விஷயம் தெள்ளிதிற் புலப்படும் ஜின்னுவின் ஜம்பத்தை ஏற்கெனவே பல லீகர்கள் கண்டித்து விட்டார்கள். நிஸாம் மன்னரின் இந்த அறிக்கை ஏனைய லீகர்களின் கண்களையும் திறக்குமா?


## விளம்பரம்

தொல்புரம் நெல்லியான் கள்ளுவான் றோட்டில் பொன்னாலைக் குளக்கழிவு வாய்க்காலில் மேற்படி றோட்டில் 1/3-ம் நம்பருள்ள மதவுக்கு அருகாமையில் ஓர் அணை கட்டுவதற்கு வடமாகாணப் பகுதி ஏஜண்டு அவர்கள் 19'6-ம் ஆண்டு மார்கழிமாதம் 17 ந்திகதி செவ்வாய்க்கிழமை காலை 12 மணிக்குள் குறித்த (றெண்டர்) விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

விண்ணப்பப் பத்திரங்கள் ரூபா 25 கட்டி வடமாகாண ஏஜண்டசிடம் பெற்றுக்கொண்ட பத்திரங்களில் எழுதப்படவேண்டும். மறுவிபரங்களை அவரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ம. ஸ்ரீகந்தா,
வடமாகாண ஏஜண்டு அவர்கட்காக.

கச்சேரி,
18 11·46 G 119 26



## ஜீவாதார வைத்திய விளம்பரம்

மானிடர்க்குப் பெருஞ் செல்வமாகக் கிடைத்த சஞ்சீவி வைத்தியம்

ஒருமனதுடன் வந்து
நற்சுகத்தைப் பெறுங்கள்

பித்தம், மேகச்சூடு, சலரோகம், இருமல், தொய்வு ஏனைய காய்ச்சல் ரோகங்களும் மருந்து அருந்திய நேரந் தொடங்கி வருத்தம் காண்பியாது நற்பலனைக் கொடுக்கும். எந்த ரோகிகளும் தாங்கள் இரத்தம் சுத்தமாகும் வரை மருந்து அருந்திவரவேணும்.

இங்ஙனம்,
க. த. அப்பாத்துரை.
சுதேசவைத்தியர்
தாவடி வடக்கு, கொக்குவில்.

(Mis 160 30-8—30-11-46)

## நற்சாட்சிப் பத்திரங்கள்

ஜீவாதார வைத்தியசாலையில் நமது மனைவி (Hysteria) வாய்வுக்கு, தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரைப்பிள்ளையிடம் 3 வேளை மருந்து சாப்பிட்டபின் பூரண சுகமடைந்ததை இத்தால் சகலருக்கும் அறிவிக்கிறேன்.

இங்ஙனம்,
த. சின்னத்துரை,
தாவடி.

ஜீவாதார வைத்தியசாலையில் தாவடி ஸ்ரீமான் க. த. அப்பாத்துரை அவர்களின் மருந்துகளை இரண்டுநேரம் உட்கொண்டதினல், நாலு வருஷ காலமாகக் கஷ்டப்பட்டிருந்த தொய்வு வியாதியால் மீளப்பெற்று மூன்று மாதத்தின் பின் இதை வெளியாக்குகிறேன்.

இங்ஙனம்,
லோறன்ஸ் மிக்கேல்,
கரையூர்.

(Mis 195 22 10 to 21-1-47)


## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

**புதன் நவ 27**

காலை 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 பாலக்காடு கே வி நாராயணசாமி பாட்டு 8 அங்கிலத்தில் செய்திகள் 8.15 லலிதா வெங்கட்ராமன் இசைத்தட்டு 8.30 இ எம் ஹனிபா பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 இ எம் ஹனிபா பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 இ எம் ஹனிபா பாட்டு 2-15 கல்விஒலிபரப்பு 2-45 முடிவு

மாலை 5 பாலக்காடு கே வி நாராயணசாமி பாட்டு 5.40 இசைப் பயிற்சி 6 அங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 திரைப்பட விமர்சனம் 8 பாக்கியஸ்ரீ நாடகம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஐரோப்பிய சங்கீதம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9 45 ஆங்கிலநிகழ்ச்சி 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

**வியாழன் நவ 28**

காலை 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 அயிலூர் ஆர் கிருஷ்ணன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 கமலா கிருஷ்ணமூர்த்தி இசைத்தட்டு 8-30 ஆர் ரங்கநாயகிவீணை 9முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1·40 அயிலூர் ஆர் கிருஷ்ணன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 அயிலூர் ஆர் கிருஷ்ணன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 நாகர்கோயில் கே மகாதேவன் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 என் வி வஸந்த கோகிலம் இசைத்தட்டு 7.15 செய்தி விளக்கம் பேச்சு 7.30 தமிழில் செய்திகள் 7.45 நாகம்மா கமலா பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 மரந்தே போனர்கள் நாடகம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 நாகர்கோவில் கே மஹாதேவன் பாட்டு 10-30 முடிவு.

**வெள்ளி நவம்பர் 29**

காலை 7-15 கிதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 மாயவரம் கே ராமசாமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருச்சி வாத்யகோஷ்டி 8.30 டி எம் ஹம்சவல்லி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 அங்கிலத்தில் செய்திகள் 1-40 மாயவரம் கே ராமசாமி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 மாயவரம் கே ராமசாமி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 கே எஸ் ராஜம், கே என் கமலம் பாட்டு 5-40 குரான்ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 இலுப்பூர் நடேசபிள்ளை நாகஸ்வரம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 நான் எனும் அகந்தை பேச்சு 8 இலுப்பூர் நடேசபிள்ளைநாகஸ்வரம் 8-30 கே என் ராஜம், கே என் கமலம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 கே சங்கர ராமய்யர் வீணை 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 உடன் விகைாரங்கள் 10 இசை வேளை 10-30 முடிவு.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday, November, 26, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org